இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 32 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 25 – செவ்வாய்க்கிழமை 10 செப்டம்பர் 2024 – திருச்சி ★ ★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 32: Thiruvalluvar Year - 2055 - Aavani 25 - Tuesday 10 September 2024 - Trichy ★★ 8 Pages ₹ 5.00







தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 7.9.2024 அன்று அமெரிக்கா நாட்டின் சிகாகோவில், சிகாகோ தமிழ் கூட்டமைப்பு மற்றும் சிகாகோ தமிழ்ச் சங்கங்களின் சார்பில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், முதல்வரின் துணைவியார் திருமதி. துர்கா ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, சிகாகோவிற்கான துணைத் தூதர் சோம்நாத் கோஷ், அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, சிகாகோ தமிழ் கூட்டமைப்பு மற்றும் சிகாகோ தமிழ்ச் சங்கங்களின் நிர்வாகிகள், அமெரிக்க வாழ் தமிழர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. ஆட்சியில்தான் ஐ.டி. துறை முன்னேற்றம்!

# திராவிட மாடல் ஆட்சி, உலகத் தமிழர்களின் பாதுகாப்பு அரண்!

## சிகாகோவில் தமிழர்கள் அளித்த உணர்ச்சிமிகு வரவேற்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சியுரை!

**சிகாகோ, செப்.10-**

**சிகாகோவில் தமிழர்கள் அளித்த உணர்ச்சிமிகு வரவேற்பை ஏற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், தி.மு.க. ஆட்சியில் தான் ஐ.டி. துறை முன்னேற்றம் அடைந்துள்ளது என்றும், திராவிட மாடல் ஆட்சி, உலகத் தமிழர்களின் பாதுகாப்பு அரணாக திகழ்ந்து கொண்டிருக்கிறது என்றும் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 7.9.2024 அன்று அமெரிக்கா நாட்டின் சிகாகோவில், சிகாகோ தமிழ் கூட்டமைப்பு மற்றும் சிகாகோ தமிழ்ச் சங்கங்களின் சார்பில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

எனக்கு என்ன தோன்றுகிறது என்றால் பேசாமல் உங்கள் முகத்தை மட்டுமே பார்த்துக் கொண்டே இருந்தால் போதும்.

தமிழ்நாட்டில் நான் முதலமைச்சராக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டால், எப்படி இருக்குமோ, அதைவிட அதிகமான உணர்வுப்பெருக்கோடு சிகாகோவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் நல்ல வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது.

**லேட்டாக வந்தாலும் லேட்டஸ்டாக வரவேற்பு!**

தமிழ் மண்ணில் இருக்கும் மாதிரியான உணர்வை எனக்கு ஏற்படுத்தியிருக்கும் உங்களுக்கு, உங்களில் ஒருவனாக உங்கள் குடும்பங்களில் ஒருவனாக நான் எனது இதயபூர்வமான நன்றியை மீண்டும் மீண்டும் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஐக்கிய அரபு அமீரகம், ஜப்பான், சிங்கப்பூர், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்குச் சென்று அதற்குப் பிறகு, அமெரிக்காவுக்கு லேட்டாக வந்திருந்தாலும் லேட்டஸ்டாக வரவேற்பு கொடுத்திருக்கிறீர்கள். அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் பேசும்போது கூட சொன்னார், நான் எங்கள் பகுதிக்கு வர வேண்டும், எங்கள் ஊருக்கு வர வேண்டும் என்று ஒரு போட்டியே நடந்தது, அதில் சிகாகோ வெற்றி பெற்றுள்ளது. அப்படி வெற்றி பெற்றிருக்கக்கூடிய சிகாகோவிற்கு வந்து உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

> **“கீழடி கண்டுபிடிப்புகள் மூலமாக, நான்காயிரம் ஆண்டுக்கு முன்பாகவே எழுத்தறிவு பெற்றும், நகர நாகரிகத்துடனும் மேம்பட்ட சமூகமாக வாழ்ந்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் நாம்! அதனால்தான் இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, இனி தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்படவேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்கிறேன்.”**

இதே சிகாகோவிற்கு நம்முடைய தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமெரிக்க பயணத்தின்போது வந்திருக்கிறார். நான் இந்த நிகழ்ச்சிக்கு வருவதாக ஒப்புதல் தந்த பிறகு தலைவர் கலைஞரின் அமெரிக்கப் பயணத்தில் எங்கு எல்லாம் சென்றார் என்று எடுத்துப் படித்தேன்.

**ஆர்லண்டோ நகரைப் பற்றி கலைஞர் எழுதிய கவிதை!**

1971ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் நாள் வாஷிங்டனுக்கு வந்த தலைவர் கலைஞர் அவர்கள் பல்வேறு இடங்களை பார்வையிட்டிருந்தார். அதிலும் குறிப்பாக, ஆர்லண்டோ நகரில் நடைபெற்ற கலைவிழாவில் கலந்துகொண்டு, அங்கிருந்து நீரூற்றைப் பார்த்து ஒரு கவிதை எழுதி, அங்கிருந்து சென்னைக்கு அனுப்பி வைத்தார். அதை நான் முரசொலியில் படித்து பார்த்தேன்.

அந்த கவிதையில் சொல்லியிருக்கிறார்:

**“ஆர்லந்தோ எனும் நகரில் அரியதோர் ஏரியிலே**
**அழகிய மத்தாப்பூ ஊற்றொன்டு கண்டேன்**
**ஒளிவிளக்குப் போடுகின்ற தாளத்திற்கு**
**ஒரு லயமும் பிசகாமல் ஆடுகின்ற**
**நீரூற்று ஆட்டக்காரி நாட்டியத்தின்**
**நேர்த்தி யென்ன சொல்வேன்!”**

- என்று தொடங்கும் அந்தக் கவிதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

அடுத்து, இதே சிகாகோவுக்கு வந்திருந்தார். வந்தவர், சிகாகோ பல்கலைக் கழகத்தின் அரசியல் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

பின்னர் நியூயார்க் சென்று, நியூயார்க் தமிழ்ச் சங்கத்தை தொடங்கி வைத்தார். அப்போது எப்படி தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற தகுதியோடு தலைவர் கலைஞர் அவர்கள் வந்தாரோ, அதே போல் இன்று நானும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற தகுதியோடு இங்கு வந்திருக்கிறேன்.

நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, தமிழ்நாடு எப்படியெல்லாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று, இங்கிருந்து தமிழ்நாட்டில் இருக்கும் உங்கள் உறவுகளிடம் நிச்சயமாக பேசிக் கேட்டிருப்பீர்கள்... செய்திகளில் படித்திருப்பீர்கள்... எப்படி இருக்கிறது உங்களிடம் கேட்கிறேன்? (மக்கள் மிக சிறப்பு என்று கூறினர்) நன்றி, நன்றி.

**முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு!**

தொழில் வளர்ச்சியை பொருத்த வரைக்கும், நான் எந்த நாட்டுக்குச் சென்றாலும், எந்த நிறுவனங்களின்


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


---

## தருமபுரி மாவட்டத்தில் தொழில் பூங்கா!

### ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் தமிழ்நாடு அரசு விண்ணப்பம்!

*தருமபுரி, செப்.10 -*

*தர்மபுரி மாவட்டத்தில் தொழில் பூங்கா அமைக்க சிப்காட் திட்டமிட்டுள்ளது. இதற்கான சுற்றுச்சூழல் அனுமதி கோரி ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது.*

*தர்மபுரி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது. இதன்படி, அதகப்பாடி, தடங்கம், அதியமான்கோட்டை, பாலஜங்கமனஅள்ளி ஆகிய கிராமங்களில் நிலம் கையகப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன.*

*இப்பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைக்க பல முன்னணி நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*சுமார் ஆயிரத்து 725 ஏக்கர் பரப்பளவில் இந்த சிப்காட் தொழில் பூங்கா அமைக்கப்பட உள்ளது. 462 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த சிப்காட் தொழில் பூங்கா மூலம் 18 ஆயிரத்து 300 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், தர்மபுரி மாவட்ட தொழில் பூங்காவுக்கு சுற்றுச்சூழல் அனுமதிக்கோரி ஒன்றிய சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்ற அமைச்சகத்திடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளதாக சிப்காட் நிர்வாகம் தெரிவித்துள்ளது.*

---

## இராமநாதபுரம் மாவட்ட கடற்கரையில் சுற்றுலா பயணிகளுக்கு கப்பல் சேவை!

*இராமநாதபுரம், செப். 10-*

*இராமநாதபுரம் மாவட்ட கடற்கரை பகுதிகளில் சுற்றுலா பயணிகள் கப்பல் சேவையை தொடங்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. ராமேஸ்வரம், பாம்பன், தேவிபட்டினம் உள்ளிட்ட இடங்களில் சுற்றுலா பயணிகள் கப்பல் சேவை இயக்க திட்டமிட்டுள்ளது.*

*அதிகபட்சம் 50 பேர் பயணம் செய்யும் வகையில் 3 மணி நேரத்துக்கு மிகாமல் சுற்றுலா பயணிகள் கப்பலை இயக்க திட்டமிட்டுள்ளது. சுற்றுலா பயணிகள் கப்பலை இயக்க விருப்பம் உள்ள நிறுவனங்கள் விண்ணப்பங்களை அளிக்கலாம். பயணிகள் கப்பலை இயக்க விருப்பம் உள்ள நிறுவனங்கள் அக்டோபர் 7ம் தேதிக்குள் விண்ணப்பங்களை அளிக்க வேண்டும்.*

*இராமநாடு என்று அழைக்கப்படுகின்ற இராமநாதபுரம் மிகப்பழமையான ஊர்களுள் ஒன்றாகும்.*

*இராமநாதபுரம் மாவட்டம் சில முக்கிய சுற்றுலாத்தலங்கள் அமையப்பெற்றது. இராமேஸ்வரம், முனைவர் அப்துல் கலாம் அவர்கள் நினைவு மண்டபம், பாம்பன் பாலம், தேவிப்பட்டினம், திருப்புல்லாணி, திரு உத்திர கோசமங்கை மற்றும் ஏர்வாடி சுற்றுலா தளமாக உள்ளது.*

*இந்த சுற்றுலா தளத்தில் வருடத்திற்கு லட்சக்கணக்கான பயணிகள் வந்து செல்கின்றனர். இந்த நிலையில் சுற்றுலா பயணிகள் கோரிக்கையை ஏற்று ராமநாதபுரம் மாவட்ட கடற்கரை பகுதிகளில் சுற்றுலா பயணிகள் கப்பல் சேவையை தொடங்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு விருப்பம் உள்ள நிறுவனங்கள் அக்டோபர் 7ம் தேதிக்குள் விண்ணப்பங்களை அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு கடல்சார் வாரியம் கூறியுள்ளது.*